### ஒன்றிய அரசு பாராமுகம்: எம்.பி.க்கள் போராட்டம்!

# தமிழ்நாட்டு மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 9-

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்து படகுகளை பறித்துச் செல்வதும் தொடர் கதையாக உள்ளது எனவும், இத்தகைய செயலைத் தடுக்காமல் ஒன்றிய அரசு பாராமுகம் காட்டுவதால் கழக எம்.பி.க்கள் மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இனியாவது தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:

**இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதையும் கைது செய்யப்படுவதையும் தடுக்க ஒன்றிய அரசு தலையிட்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் பல கடிதங்கள் எழுதியும் ஒன்றிய அரசு பாராமுகமாகவே உள்ளது.**

**கைது செய்யப்பட்டுள்ள நமது மீனவர்கள் 97 பேரையும் பிடித்துவைக்கப்பட்டுள்ள216படகுகளையும்விடுவிக்கக் கோரி, தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று போராட்டம் நடத்தினர். ஒன்றிய அரசு உடனடியாக விழித்துக்கொண்டு, நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### உலக பாரா தடகள போட்டி - வாள் வீச்சுப் போட்டிகளில் பங்கேற்கவிருக்கும்

# 18 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.16.70 லட்சம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.9-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2025) புது தில்லியில் 8.3.2025 முதல் 11.3.2025 வரை நடைபெறவிருக்கும் உலக பாரா தடகள கிராண்ட் ப்ரீ (World Para Athletic Grand Prix) 2025 போட்டியில் பங்கேற்கவிருக்கும் தமிழ்நாட்டைச்சேர்ந்த16வீரர்-வீராங்கனைகளுக்கு செலவீன தொகையாக தலா 65 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 10.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

தொடர்ந்து, கஜகஸ்தான் நாட்டில் 14.2.2025 முதல் 16.2.2025 வரை உலக வாள்வீச்சு கூட்டமைப்பு (FIE) நடத்தும் ஜூனியர் உலக கோப்பை வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ள தமிழ்நாடு வீராங்கனை செல்வி. பிளெஸ்ஸிலா சங்மா, வீரர் திரு. ப. அரவிந்தன் ஆகியோருக்கு செலவீன தொகையாக தலா ரூ. 3.15 லட்சம் வீதம் ரூ.6.30 லட்சத்திற்கான காசோலைகளையும் சேர்த்து கூடுதல் மொத்தமாக 18 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ. 16.70 லட்சத்திற்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

மேலும் லடாக் யூனியன் பிரதேசம், லே நகரத்தில் 24.1.2025 முதல் 27.1.2025 வரை நடைபெற்ற கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 வீரர்-வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து பாராட்டும், வாழ்த்தும் பெற்றனர். இப்போட்டியில் பங்கேற்க 11 தமிழ்நாடு வீரர்-வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் செலவீன தொகையாக ரூ. 7.05 லட்சம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியத்தில் பதிவுத்துறை சார்பில் ரூபாய் 191.51 லட்சம் மதிப்பில் சார்பதிவாளர் அலுவலக புதிய கட்டடத்தினை வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, பூதலூர் முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் கல்லணை செல்லகண்ணு மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### புதுக்கோட்டைக்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வழி நெடுகிலும் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை. பிப். 9 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, மாநகர செயற்குழு கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி தலைமையில் 601.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம், பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவைக் கூடத்தில் நடைபெற்றது.

மாநில நிர்வாகிகள் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை விஜயா, த. சந்திரசேகரன், செ.அசோக்பாண்டியன், சு.சண்முகம், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.எஸ். கருப்பையா, பி.ராஜேஸ்வரி, க.மதியழகன், எம். லியாகத் அலி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் பொதுக் குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, எம்.செந்தில்குமார், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், வெ.முத்து கிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, என். சேட்டு, மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ. இளங்குமரன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், கே.பி.அய்யப்பன், உமுருகேசன், அ. ரெத்தினம், எம்.எம்.பாலு, மு.கலியமூர்த்தி, எம்.வேலுச்சாமி, செந்தாமரை பாலு, வி.ஜி. ஆர்.மணிவண்ணன்,வி.என். எம்.பாலு, வே.ராஜேஸ், புத்தாம்பூர் எம்.சுப்பையா, சி. அரங்கநாயகம், டி. எம்.ஆர். ராமமூர்த்தி எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, முகம்மது அன்சாரி பாஷித், ப.ரெங்கராஜ், மா.மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், காதர் கனி, டி. அப்புக்காளை, மு.ராஜதுரை, ராமலிங்கம், ஏ.எல். கணேசன், தெய்வானை, ராயல் சபா, ஏ.எம்.சிற்றரசு, விராலிமலை சிவா, சி.மதியழகன், ஐ.எம்.பால்ராஜ், பிரேம் ஆனந்த ஆ.ஜேம்ஸ்,



விஏடிசி ராஜேந்திரன், அற்புத ஹென்றி, கை.பழனிச்சாமி, கே.எம்.எஸ்.குமார், சுகி (எ) சுகுமாறன், செ. கணேஷ், க.செல்லையா, ராமச்சந்திரன், அறிவுடை நம்பி, மாலையீடு பிரபு, சுப. கார்த்திகேயன், முத்துக் கருப்பன்,எல்.சி ரமேஷ், முரளிதரன், எழில் ராஜா, செல்வம், இயங்கோ, புதுநகர் குமார், தமிழினியன், செல்வம், ராமச்சந்திரன், கண்மணி சுப்பு, தனபால், தியாகு, ஞானவேல், ஓவியா

மாநில , மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் பொதுக்குழு உறுப்பினர் என்.சாத்தையா நன்றி கூறினார். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

9.2.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுக்கோட்டைக்கு வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிளும் உற்சாக வரவேற்பு கொடுப்பதென தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மார்ச் 1 அன்று தமிழக முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்!

## அமைச்சர்கள் பி.மூர்த்தி - முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தனர்!

தஞ்சாவூர், பிப்.9-

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பூதலூர் வட்டம் ரூ.192 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடமும் தஞ்சாவூர் பாபநாசம் வட்டம் அம்மாபேட்டை பேரூராட்சியில் புதியதாக சார்பதிவகம் இன்று முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பா. பிரியங்கா பங்கஜம், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி. கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் பதிவுத் துறை தலைவர் டாக்டர்.வி.ஏ. ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தில் ஏற்கனவே பத்திர பதிவுத்துறை அலுவலகம் செயல்பட்டு வந்தது. பின்பு காலப்போக்கில் இந்த பத்திரப்பதிவு அலுவலகமானது பாபநாசம் நீடாமங்கலம் தஞ்சாவூர் ஆகிய பகுதிகளுக்கு மாற்றப்பட்டது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்தில் சென்று வந்தனர். எனவே, பத்திரபதிவு அலுவலகத்தை மீண்டும் அம்மாபேட்டைக்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அம்மாபேட்டையில் மீண்டும் பத்திர பதிவு அலுவலகத்தை செயல்படுத்த உத்தரவிட்டார். அதன்படி, பத்திர பதிவுத் துறை சார்பாக புதிய பத்திரப்பதிவு அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டது. அதேபோல் பூதலூர் வட்டத்தில் ரூ.192 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டது என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உதவி பதிவுத் துறை தலைவர் வே.சின்னராஜ், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் கட்டடம் நாகவேல், அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் நெடுஞ்செழியன், பூதலூர் பதிவாளர் குமார், அம்மாபேட்டை பதிவாளர் விஜயன், பேருராட்சி தலைவர்கள் தியாக சுரேஷ் (அம்மாபேட்டை), கல்லணை செல்லக்கண்ணு (பூதலூர்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மனைவி எழிலினி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, பிப்.9-

முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் மனைவி எழிலினி சுந்தரம் மறைவுற்றார். கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் அமைச்சர், முன்னாள் கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் நினைவில் வாழும் க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.எழிலினி சுந்தரம் (வயது 70) அவர்கள் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தியறிந்து அவரது உடலுக்கு மலர் வளையம் அணிவித்து கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர். அவரது இறுதி ஊர்வலம் நேற்று (8.2.2025 சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் அவரது இல்லம் அமைந்துள்ள எண்.39, பாலாஜி நகர், மீஞ்சூர் என்ற முகவரியில் இருந்து புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

### பாளையங்கோட்டை வட்டத்தில்

# முடிவுற்ற நிரந்தர சீரமைப்புப் பணிகள்!

## நீர்வளத்துறை கூடுதல் செயலர் டாக்டர் க.மணிவாசன் ஆய்வு!

நெல்லை, பிப். 9-

நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழாகுறிச்சி அணைக்கட்டில் முடிவுற்ற நிரந்தர சீரமைப்புப் பணியினை நேற்று முன்தினம் (07.02.2025) ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்தில் சுமார் 191 ஏக்கர் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலும், நிலத்தடி நீர் அபிவிருத்தியடையும் வகையிலும், திடியூர் கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே உள்ள தமிழாகுறிச்சி அணைக்கட்டில் கடந்த 14.05.2024 அன்று மேற்கொள்ளப்பட்டு 30.10.2024 அன்று முழுவதுமாக முடிவுற்ற நிரந்தர சீரமைப்பு பணியினை நேற்று (07.2.2025) நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் சா.மன்மதன், நீர்வளத் துறை மதுரை மண்டல தலைமை பொறியாளர் எஸ்.ரமேஷ் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் எஸ். சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காளி வி.எஸ்.வாசன்

**பிப்ரவரி 9 (2007)**



**மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.**

**முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

**பிப்ரவரி 9 (1985)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**